| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் - பத்தாம் வகுப்பு | | | |
| தமிழ் – அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024 - 2025 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | | | |
| பகுதி - I | அனைத்து வினாக்களுக்கும் குறியீட்டுடன் விடையளிக்கவும். | | 15 x 1 = 15 |
| 1 | அ | அருமை + துணை | 1 |
| 2 | ஆ | மோனை, எதுகை | 1 |
| 3 | ஈ | மன்னன், இறைவன் | 1 |
| 4 | ஆ | மணி வகை | 1 |
| 5 | ஆ | தளரப் பிணைத்தால் | 1 |
| 6 | அ | அகவற்பா | 1 |
| 7 | ஈ | தலையில் கல் சுமப்பது | 1 |
| 8 | அ | வேற்றுமை உருபு | 1 |
| 9 | இ | உழவு, ஏர், மண், மாடு | 1 |
| 10 | ஈ | வானத்தையும் பேரொலியையும் | 1 |
| 11 | அ | இன்னிசை அளபெடை | 1 |
| 12 | இ | சிலப்பதிகாரம் | 1 |
| 13 | அ | இளங்கோவடிகள் | 1 |
| 14 | அ | எண்ணும்மை | 1 |
| 15 | ஆ | பவளம் | 1 |
| பகுதி - II | | | |
| பிரிவு - I | எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.<br>21 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும் | | 4 x 2 = 8 |
| 16 | விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க. ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | | |
| அ | உயர்வு தருவது எது ? | | 1 |
| ஆ | வசன கவிதை யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது ? | | 1 |
| 17 | ❖ கும்பகருணனே உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்கு எழுந்திடுவாய் எழுந்திடுவாய் என்று சொல்லி எழுப்பினார்கள்.<br>❖ எமனுக்குத் தூதுவரான வில்லைப்பிடித்த இராமன் கையில் உறங்கப் போ என்றனர். | | 2 |
| 18 | ❖ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.<br>❖ இவ்வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று. இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. | | 2 |
| 19 | உவமை - நெற்பயிர் நெல்மணியாய் ஆவதற்கு முன் மழையின்றி வாடிக் காய்ந்தது. | | 2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | கருத்து - கருணையன் தன் தாயை இழந்து வாடுகிறார். | |
| 20 | ❖ அறம் கூறும் மன்றங்கள் அரசனின் ஆட்சிக்குத் துணைபுரிந்தன.<br>❖ அறங்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு.<br>❖ மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது மதுரைக்காஞ்சி. | 2 |
| 21 | பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே<br>நல்லார் தொடர்கை விடல் - திருவள்ளுவர் | 2 |
| பிரிவு II | எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. | 5x2=10 |
| 22 | *இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*<br>*( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக )* | |
| அ | கொள் – கோள் - தெரிந்து **கொள்** பூமியும் ஒரு **கோள்** தான். | 1 |
| ஆ | மலை – மாலை - **மலை** மீது **மாலை**யில் ஏறினேன் | 1 |
| 23 | *வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.* | |
| அ | கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருக்கிறவரை** அழைத்து வாருங்கள். | 1 |
| ஆ | ஊட்டமிகு உணவு **உண்டவர்** நீண்ட வாழ்நாள் பெற்றார். | 1 |
| 24 | *கலைச்சொற்கள் தருக.* | |
| அ | Discussion – கலந்துரையாடல் | 1 |
| ஆ | Homograph – ஒப்பெழுத்து | 1 |
| 25 | *சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.* | |
| அ | இன்சொல் – பண்புத்தொகை - இன்சொல் பேசி விருந்தினரை வரவேற்க வேண்டும். | |
| ஆ | எழுகதிர் - வினைத்தொகை - எழுகதிரின் காட்சி அழகானது | |
| 26 | *ஊர்ப்பெயர்களின் மரூஉ வை எழுதுக.* | |
| அ | புதுக்கோட்டை – புதுகை | 1 |
| ஆ | திருச்சிராப்பள்ளி – திருச்சி | 1 |
| 27 | *பழமொழிகளைநிறைவுசெய்க.* | |
| அ | கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு | 1 |
| ஆ | உப்பிட்டவரை உள்ளளவும் நினை. | 1 |
| 28 | *அகராதியில் காண்க.* | |
| அ | அடவி – காடு | |
| ஆ | அவல் – பள்ளம், குளம் | |
| | பகுதி - III | |
| பிரிவு - I | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. | 2 x 3 = 6 |
| 29 | நாற்று – கத்தரி நாற்று வாங்கி வந்தேன்<br>கன்று – மாங்கன்று வளர்ந்துள்ளது<br>வடலி – பனை வடலி நடப்பட்டுள்ளது<br>பைங்கூழ் – நெல்லின் பைங்கூழ் நடப்பட்டுள்ளது | 3 |

| | | | |
|---|---|---|---|
| | பிள்ளை | தென்னம் பிள்ளை நடப்பட்டுள்ளது | |
| | குருத்து | வாழைக் குருத்து அழகாக உள்ளது | |
| 30 | இடம் | சென்னை மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தில் ம.பொ.சி. கூறியது. (சிற்றகல் ஒளி) | 3 |
| | பொருள் | உயிரைக் கொடுத்தேனும் (சென்னையைக்) தலைநகரைக் காப்போம். | |
| | விளக்கம் | மொழிவாரி மாநிலப் பகிர்வின் போது, சென்னையை ஆந்திராவுடன் சேர்க்க முயற்சி நடந்தது. அப்போது சென்னை மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தில் "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று ம.பொ.சி. கூறினார். | |
| 31 | **உரைப்பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக.** | | |
| அ | இந்தியா, சுதேசமித்திரன் | | 1 |
| ஆ | பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி | | 1 |
| இ | நீடுதுயில் நீக்க பாடிவந்த நிலா, சிந்துக்குத் தந்தை | | 1 |
| பிரிவு -II | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.<br>34 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும் | | 2 x 3 = 6 |
| 32 | ❖ அன்னை மொழி<br>❖ அழகான செந்தமிழ்<br>❖ பழமையான நறுங்கனி<br>❖ குமரிக்கண்டத்தை ஆண்ட பேரரசி<br>❖ பாண்டியரின் மகள்<br>❖ திருக்குறளின் மாண்பு<br>❖ பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கிய வளங்களைக் கொண்டுள்ளது. | | 3 |
| 33 | ❖ உயிர் பிழைக்கும் வழி அறியேன்.<br>❖ உடலின் தன்மை அறியேன்.<br>❖ உணவைத் தேடும் வழியறியேன்.<br>❖ காட்டில் செல்லும் வழி அறியேன். | | 3 |
| 34 | வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்<br>மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்<br>மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மாநீ !<br>ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே .<br>(அல்லது)<br>வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்<br>பொய்யோவெனு மிடையாளொடு மிளையா னொடும் போனான்<br>மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ<br>ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான் . | | 3 |

| பிரிவு 3 | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. | 2 x 3 = 6 |
|---|---|---|

| 35 | சீர் | அசை | | | வாய்பாடு | 3 |
|---|---|---|---|---|---|---|
| | வே / லொடு | நேர் | நிரை | - | கூவிளம் | |
| | நின் / றான் | நேர் | நேர் | - | தேமா | |
| | இடு / வென் | நிரை | நேர் | - | புளிமா | |
| | றது / போ / லும் | நிரை | நேர் | நேர் | புளிமாங்காய் | |
| | கோ / லொடு | நேர் | நிரை | - | கூவிளம் | |
| | நின் / ற | நேர் | நேர் | - | தேமா | |
| | இர / வு | நிரைபு | | | பிறப்பு | |
| | இக்குறட்பா பிறப்பு என்னும் வாய்பாட்டைக் கொண்டு முடிந்துள்ளது. | | | | | |

| 36 | அணி பிரிப்பு | தன் + குறிப்பு + ஏற்றம் + அணி | 3 |
|---|---|---|---|
| | அணி இலக்கணம் | இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின்மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதே தற்குறிப்பேற்ற அணி ஆகும். | |
| | சான்று | "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி<br>வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட" - சிலம்பு | |
| | பாடலின் பொருள் | 'கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது வரவேண்டாம்' எனத் தடுப்பதுபோலக் கைகாட்டியது என்பது பொருள். | |
| | அணிப் பொருத்தம் | கொடி காற்றில் அசைவது இயல்பான நிகழ்ச்சி. கோவலன் கொல்லப்படுவான் அதனால் அவனை மதுரை நகருக்குள் வரவேண்டாம் எனத் தடுப்பது போல் கொடிகள் அசைந்ததாக தன் மனக் குறிப்பை ஏற்றிக் கூறி இருப்பதால் இது தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று. | |

| 37 | ஓசை | அகவல் ஓசை பெற்று வரும். | |
|---|---|---|---|
| | சீர் | இயற்சீர் பயின்று வரும். | |
| | தளை | ஆசிரியத்தளை பயின்று வரும். | |
| | அடி | மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும். | |
| | முடிப்பு | ஏகாரத்தில் முடிவது சிறப்பு. | |

| பகுதி IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. | 5x5= 25 |
|---|---|---|

| 38 | சோலைக்காற்று : | நான் வாழும் இடம் சோலைகளும் வனங்களும். நீ? | 5 |
|---|---|---|---|
| | மின்விசிறிக் காற்று | நான் வாழும் இடம் வீடுகளும் அலுவலகங்களும் | |
| | சோலைக்காற்று | மாலை நேரங்களில் என்னைத் தேடி மக்கள் வருவர். | |
| | மின்விசிறிக் காற்று | வீட்டுக்குள்ளே இருப்பவர்களுக்குக் குளிர்ந்தக் காற்றை நான் தருவேன். | |
| | சோலைக்காற்று | மின்சாரம் இல்லை எனில் நீ இல்லை.<br>நான் இயற்கையானவன். | |
| | மின்விசிறிக் காற்று | ஆம். எனக்கு விலை உண்டு . நீ விலை மதிப்பற்றவன் | |
| | ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண்வழங்குக ) | | |
| | (அல்லது) | | |

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும்.<br>❖ இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும்.<br>❖ தொந்தியுடன் கூடிய சிறு வயிறும் ஆடட்டும்.<br>❖ பொட்டுடன் கூடிய நெத்திச்சுட்டியும் பதிந்தாடட்டும்.<br>❖ கம்பிகளால் உருவான குண்டலங்களும், காதின் குழைகளும் அசைந்தாடட்டும்.<br>❖ கொண்டையும் அதனைச் சுற்றியுள்ள முத்துகளும் சேர்ந்தாடட்டும்.<br>❖ பழமையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளி இருக்கும் முருகப்பெருமானே!<br>❖ பவளம் போன்ற அழகிய மேனியும் ஆடும்படி செங்கீரை ஆடுவாயாக. | 5 |
| 39 | நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம்<br>அனுப்புநர்<br>இளமுகிலன்,<br>45 செந்தமிழ் நகர்,<br>வெண்பாவூர் ,<br>பெரம்பலூர் மாவட்டம் - 606122<br>பெறுநர்<br>ஆசிரியர்,<br>தென்றல் நாளிதழ்,<br>திருச்சி.<br>பொருள் : கட்டுரை வெளியிட வேண்டுதல் தொடர்பாக<br>மதிப்பிற்குரிய ஐயா.<br>வணக்கம். பொங்கல் பண்டிகையை ஒட்டி தங்கள் நாளிதழ் வெளியிடும் பொங்கல் மலருக்காக **உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்** என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதி உள்ளேன். கட்டுரையை இக்கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். தாங்கள் அக்கட்டுரையைப் பொங்கல் சிறப்பு மலரில் வெளியிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.<br>நன்றி<br>இடம் : வெண்பாவூர் இப்படிக்கு,<br>நாள் : 10.12. 2024 தங்கள் உண்மையுள்ள,<br>இளமுகிலன்,<br>இணைப்பு<br>1 உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் கட்டுரை<br>உறை மேல் முகவரி<br>பெறுநர்<br>ஆசிரியர்,<br>தென்றல் நாளிதழ்,<br>திருச்சி. | 5 |
| | (அல்லது) | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்<br>அனுப்புநர்<br>பாரதி வே<br>கம்பன் நகர்,<br>பெரம்பலூர்.<br>பெறுநர்<br>உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,<br>உணவுப் பாதுகாப்பு ஆணையம்,<br>பெரம்பலூர்.<br>ஐயா,<br>பொருள் - தரமற்ற உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுதல் சார்பு.<br>வணக்கம், நான் இன்று காலை பெரம்பலூரில் உள்ள அறுசுவை உணவு விடுதிக்குச் சென்றேன், அங்கு வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது. இதுகுறித்து கேட்டபோது பொறுப்பில்லாமல் பதில் அளித்தனர் எனவே அந்த உணவு விடுதி மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். உரிய சான்றுகள் மற்றும் இரசீது நகலை இத்துடன் இணைத்துள்ளேன்<br>நன்றி<br>நாள் : 10.12.2024 இப்படிக்கு<br>இடம் : பெரம்பலூர் தங்கள் உண்மையுள்ள<br>பாரதி வே<br>இணைப்பு<br>1 உணவின் புகைப்படங்கள்<br>2 கட்டண இரசீது<br>உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,<br>உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,<br>பெரம்பலூர். | 5 |
| 40 | சந்த நயம், எதுகை, மோனைச் சொற்கள் அமைந்திருப்பின் (கவிதை வடிவில்) முழு மதிப்பெண் வழங்கலாம்.<br><br>**காற்று**<br>மரத்தை வெட்டி<br>மனிதம் கொன்றாய்<br>இயற்கைக் காற்றை<br>தொலைத்து விட்டு<br>இந்த நிலையில் | 5 |

இருக்கின்றாய்
காற்று இன்றி
உயிர்கள் ஏது?
உயிர்கள் இன்றி
உலகம் ஏது?
காற்றே வரம்
உணர்வாய் மனிதா!

41

**மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம் -**

சேர்க்கை எண் : 7565 தேதி : 10/12/2024 வகுப்பும் : பிரிவும் / 11 ஆம் வகுப்பு கணிதம்

1. ~~மாணவ~~ மாணவியின் பெயர் / : கலாபாரதி பா

2. பிறந்த தேதி : 08/ 05/2000

3. தேசிய இனம் : இந்தியன்

4. பெற்றோர் பாதுகாவலர் பெயர் / : பால்வண்ணன்

5. வீட்டு முகவரி : 57, கிழக்குத் தெரு, ஆவாரம் பாளையம்,
ஒகேனக்கல் வட்டம், தர்மபுரி மாவட்டம்.

6.. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு

7. பயின்ற மொழி : தமிழ்

8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேல்நிலைப் பள்ளி,
ஆவாரம் பாளையம்.
தர்மபுரி மாவட்டம் 5

9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் : 475 / 500

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் (100) |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு | 654321 2024 - 2025 | தமிழ் | 95 |
| | | ஆங்கிலம் | 95 |
| | | கணக்கு | 95 |
| | | அறிவியல் | 95 |
| | | சமூக அறிவியல் | 95 |
| | | மொத்தம் | 475 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்

11. தாய்மொழி : தமிழ்

12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : கணிதப்பிரிவு / தமிழ்வழி

~~மாணவ~~ / மாணவியின் கையெழுத்து

கலாபாரதி பா

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 42 | வரவேற்பு<br>❖ தமிழரின் சிறந்தப் பண்பு விருந்தோம்பல்.<br>❖ நானும் அதைக் கடைபிடித்தேன்.<br>❖ என் மாமா ஒரு நாள் வீட்டிற்கு வந்தார்.<br>❖ அவரை வருக வருக என வரவேற்றேன்.<br>❖ பிறகு இருக்கையில் அமரச் செய்தேன்.<br>❖ குடிக்க நீர் கொடுத்தேன்.<br>❖ வீட்டில் அனைவரும் நலமா? என வினவினேன்.<br>உணவு உபசரிப்பு<br>❖ அம்மா அவருக்கு மாமிச உணவு தயார் செய்தார்.<br>❖ வாழை இலையில் உணவு அளித்தேன்.<br>❖ அவர் விரும்பி உண்ணும் உணவுகளை இலையில் அதிகமாக வைத்தேன்.<br>❖ அவர் அருகிலேயே அமர்ந்து தேவையான உணவுகளைப் பரிமாறினேன்.<br>❖ உணவு உண்டவுடன் தாம்பூலம் வழங்கினேன்.<br>❖ பிறகு, மாமா சற்று ஓய்வு எடுத்தார்.<br>நகர்வலம்<br>❖ மாலை, மாமாவுடன் கோவில், கடைவீதி போன்ற இடங்களுக்குச் சென்றேன்.<br>❖ மாலை சிற்றுண்டி அங்கேயே உண்டோம்.<br>வழி அனுப்புதல்<br>❖ மாமா ஊருக்குச் செல்வதாகக் கூறினார்.<br>❖ அவரைப் பிரிய மனம் இல்லாமல் வழி அனுப்பினேன்.<br>❖ நான், அவருடன் பேருந்து நிலையம் வரை சென்று வழி அனுப்பினேன்.<br>❖ மிகுந்த மன நிறைவு ஏற்பட்டது. | 5 |
| | (அல்லது) | |
| | புலர்காலைப் பொழுது<br>❖ தங்க நிறக் கதிர்களைக் கொண்ட கதிரவன் காலையில் உதிக்கின்றது.<br>❖ தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது.<br>❖ வெண்ணிற மேகமானது அங்குமிங்கும் நகர்கிறது.<br>❖ வண்ண நிறமான பறவைகள் காலையில் தன் இசைக் கீதத்தை இசைக்கின்றன.<br>❖ சுறுசுறுப்பான வண்ணத்துப் பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன.<br>❖ மலர்களின் நறுமணம் காற்றை நிரப்புகிறது.<br>❖ தென்றல் காற்று எங்கும் வீசி இதமான சூழலைத் தருகிறது. | 5 |
| பகுதி IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. | 3x8=24 |
| 43 அ | மழைமேகம்<br>❖ மாவலி மன்னன் திருமாலுக்கு நீர்வார்த்துத் தந்தார்.<br>❖ திருமால் உலகைவிட பெரிய உருவம் எடுத்தார்.<br>❖ அதுபோல மழைமேகம் பெரிதாகக் காணப்பட்டது. | 8 |

| | | |
|---|---|---|
| | <u>மழைப்பொழிவு</u><br>❖ மேகம் கடலின் குளிர்ந்த நீரைப் பருகி பெரியதாகின்றது.<br>❖ மலையைச் சூழ்ந்து பெருமழைப் பொழிகிறது.<br><u>மாலைப்பொழுது</u><br>❖ மாலையில் முதுபெண்கள் ஊர்ப்பக்கம் சென்றனர்.<br>❖ முல்லைப் பூக்களையும் நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவினர்.<br><u>நற்சொல் கேட்டல்</u><br>❖ தெய்வத்தை வேண்டி தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்<br>❖ இது விரிச்சி கேட்டல் எனப்படும்.<br><u>ஆற்றுப்படுத்துதல்</u><br>❖ இளங்கன்று பசியால் வாடியதை இடைமகள் கண்டாள்.<br>❖ "உன் தாயை (பசுவை) எம் கோவலர் இப்போது அழைத்து வந்துவிடுவார், வருந்தாதே" என்றாள்.<br>❖ முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல் கேட்டோம்.<br>❖ தலைவன் வருவது உறுதி எனக்கூறி ஆற்றுப்படுத்தினர். | |
| | (**அல்லது**) | |
| ஆ | ❖ இடைக்காடனார் பாண்டிய மன்னன் அவையில் கவிதை படித்தார்.<br>❖ பாண்டிய மன்னன் அதனைக் கவனிக்காமல் அவமதித்தார்<br>❖ அதனால் இடைக்காடனார் பெரிதும் வருத்தம் அடைந்தார்<br>❖ இடைக்காடனார் இறைவனிடம் மன்னனின் செயலை முறையிட்டார்<br>❖ சொல்லின் வடிவான பார்வதி தேவியையும் பொருளின் வடிவான உன்னையும் அவமதித்தார்<br>❖ இதனைக் கேட்ட இறைவன் கடம்பவனத் திருக்கோயிலை விட்டு நீங்கி நேர் வடக்கே ஒரு கோயிலை உண்டாக்கி அங்கு சென்றார்<br>❖ இறைவனிடம் மன்னன் வேண்டினார்<br>❖ தன்னாலோ தன் படையாலோ அல்லது என் பகைவராலோ ஏதேனும் இடையூறு ஏற்பட்டதா என வருந்தினார்<br>❖ காட்டுவிலங்குகளாலோ அல்லது கள்வராலோ ஏதேனும் இடையூறு ஏற்பட்டதா என வருந்தினார்<br>❖ இல்லற, துறவற நெறியில் இருந்து தவறினேனா என வருந்தினார்<br>❖ இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை என அசரீரி ஒலித்தது<br>❖ தவறை உணர்ந்த மன்னன் புலவரிடம் மன்னிப்பு கேட்டு அப்புலவருக்குச் சிறப்பு செய்தான்<br>❖ புலவர் இடைக்காடனாரும் இறைவனும் மன்னனை மன்னித்தனர். | 8 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 44அ | **அன்னமய்யா**<br><br><u>முன்னுரை</u><br>❖ கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஆசிரியர் கி.ராஜநாராயணன்.<br>❖ கிராமத்து வெள்ளந்தி மனிதர்களின் விருந்தோம்பல் பற்றி கட்டுரையில் காண்போம்.<br><u>அன்னமய்யாவும் வாலிபனும்</u><br>❖ சாலையோரம் தாடியும் அழுக்கு ஆடையுடன் புளிய மரத்தடியில் ஒருவர் படுத்திருந்தார்.<br>❖ அந்த வழியாக வந்த அன்னமய்யா அவரைப் பார்த்தார்.<br>❖ அவர் தம்பி கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா? என்று கேட்டார்.<br>❖ பக்கத்தில் அருகு எடுப்பவர்களிடம் நீச்சுத் தண்ணீர் இருக்கும் வாங்கி வரவா ? என்றார்.<br>❖ அவர், நாமே அங்கே போகலாம் என்பது போல் பார்த்தார்.<br><u>விருந்து உபசரிப்பு</u><br>❖ கஞ்சிக் கலயத்தின் மேல் இருந்த கல்லை அகற்றி நீத்துப் பாகத்தை வடித்து அவரிடம் கொடுத்தார்.<br>❖ அந்த வாலிபன் அதை எப்படிக் குடிப்பது ? என யோசித்தான்.<br>❖ சும்மா கடிச்சுக் குடிங்க என்றார் அன்னமய்யா.<br>❖ அவன் 'மடக், மடக்' என்று குடித்தான்.<br>❖ மீண்டும் சோற்றின் மகுளியை வார்த்துக் கொடுத்தார்.<br>❖ அதைக் குடிக்கும்போது ஜீவ ஊற்று வெளிப்பட்டது.<br>❖ அப்படியே வேப்பமர நிழலிலே படுத்துத் தூங்கினார்.<br><u>மனநிறைவு</u><br>❖ தாயின் மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்த உடன், உறங்கும் குழந்தையைப் பார்க்கும் தாய் போல பிரியத்துடன் அவனைப் பார்த்தார்.<br>❖ தூங்கி எழுந்த வாலிபனை அடுத்தப் புஞ்சைக்கு அழைத்துச் சென்று கம்பங்கூழையும் காணத் துவையலையும் கொடுத்தார்.<br><u>பெயர்ப் பொருத்தம்</u><br>❖ அன்னமய்யா எங்கிருந்து வருகிறீர்கள்? உங்கள் பெயர் என்ன என்றார் ?<br>❖ என் பெயர் பரமேஸ்வரன் இப்போது மணி.<br>❖ உங்கள் பெயர் என்ன ? என்றான்.<br>❖ என் பெயர் அன்னமய்யா என்றார்.<br>❖ அவன் அந்தப் பெயரை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தான்.<br>❖ எவ்வளவு பொருத்தமான பெயர் என நினைத்துக் கொண்டான்.<br><u>முடிவுரை</u><br>தன்னிடம் இருப்பதைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்து வாழும் கிராமத்து வெள்ளந்தி மனிதர்களின் விருந்து போற்றுதலுக்குரியது.<br>** உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே** | 8 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | (அல்லது) | |
| ஆ | ஒருவன் இருக்கிறான்<br>முன்னுரை<br>❖ கு. அழகிரிசாமி எழுதிய **ஒருவன் இருக்கிறான்** சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் வீரப்பனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br>குப்புசாமி<br>❖ தாய் தந்தையை இழந்து ஆதரவற்று வாழ்ந்து வந்தான்.<br>❖ தாய் மாமன் வீட்டில் தங்கியிருந்தான்.<br>❖ சைக்கிள் கடையில் கிடைத்த கூலியைப் பெற்று வாழ்ந்து வந்தான்.<br>❖ வயிற்று வலியால் அவனால் வேலை செய்ய முடியவில்லை.<br>❖ தாய் மாமன், வீட்டை விட்டு விரட்டி அடித்தான்.<br>❖ சென்னையில் உள்ள சித்தி வீட்டிற்கு வந்தான்.<br>❖ சித்தி சித்தப்பா அண்டை வீட்டார் அனைவரும் அவனை அருவருப்பாக பார்த்தனர்.<br>வீரப்பன்<br>❖ வீரப்பனும் குப்புசாமியும் நண்பர்கள்.<br>❖ வீரப்பன் வீடு கட்டும் சிப்பந்தியாக வேலை செய்து வந்தான்.<br>❖ எல்லா நாளும் வேலை கிடைக்காமல் வறுமையில் வாடினான்.<br>❖ தன் நண்பனுக்காகக் கடன் வாங்கி உதவி செய்தான்.<br>❖ குப்புசாமியின் மீது அதிக அன்பு கொண்டவன்.<br>ஆறுமுகம்.<br>❖ வீரப்பன் கொடுத்து அனுப்பியக் கடிதத்தையும் பணத்தையும் கொண்டு வந்து ஒப்படைத்தவன்.<br>❖ தன் பிள்ளைகளுக்கு வாங்கிய சாத்துக்குடியைக் கொடுத்தான். மேலும் ஒரு ரூபாய் நோட்டையும் சேர்த்துக் கொடுத்தவன்.<br>கடிதச் செய்தி<br>❖ என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு, வீரப்பன் எழுதிக் கொண்டது.<br>❖ நீ இங்கிருந்து போனதிலிருந்து என் உயிர் இங்கே இல்லை.<br>❖ சதா உன் ஞாபகம் தான்.<br>❖ கடவுள் அருளால் நீ சௌக்கியமாகி வரவேண்டும்.<br>❖ உனக்காக நான் தினமும் கோவிலுக்குப் போய் சாமி கும்பிடுகிறேன்.<br>❖ இக்கடிதத்துடன் உனக்கு மூன்று ரூபாய் கொடுத்து அனுப்பி உள்ளேன்.<br>❖ மேலும் ஓரிடத்தில் பணம் கேட்டுள்ளேன்.<br>❖ பணம் கிடைத்ததும் நேரில் வந்து உன்னைச் சந்திக்கிறேன்.<br>பக்கத்து வீட்டுக்காரர்<br>❖ பக்கத்து வீட்டுக்காரர் காரணம் இல்லாமல் வெறுப்பை அவன் மேல் காட்டியவர்.<br>❖ அவரின் மனைவி கருணையோடு இருந்தார்.<br>❖ வீரப்பனின் நட்பைக் கடிதம் மூலம் அறிந்தார். | 8 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ❖ வீரப்பன் கடன் வாங்கிக் கொடுத்த அந்த மூன்று ரூபாய் அவரின் மனதை மாற்றியது.<br>❖ மனைவியை உடன் அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்ல, சாத்துக்குடி வாங்கச் சென்றார்.<br>மனிதநேயம்<br>❖ உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் வீரப்பன் உயிரையே வைத்து இருந்தான்.<br>❖ வறுமையிலும் உதவி செய்தான்.<br>❖ உதவும் மனப்பான்மையால் சம்பளமே இல்லாத பொழுது கடன் வாங்கியும் உதவி செய்தான்.<br>❖ உறவினரால் ஒதுக்கப்பட்ட போதும் உயிர் நண்பனாக விளங்கிய வீரப்பனை அழகிரிசாமி சிறந்த மனிதநேயம் கொண்ட கதை மாந்தராகப் படைத்துள்ளார்.<br>முடிவுரை<br>❖ எல்லோருக்கும் ஒருவன் இருக்கிறான் யாரும் அனாதை இல்லை என்பதை இக் கட்டுரையின் மூலம் காணும்போது மனிதம் துளிர்க்கிறது. | |
| 45 | **<u>விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்</u>**<br>**முன்னுரை**<br>❖ விண்வெளியில் பறந்த முதல் பெண்மணி கல்பனா சாவ்லா அவர்களைப் பற்றி கட்டுரையில் காண்போம்.<br>**பிறப்பு**<br>❖ ஹரியானா மாநிலம் கர்னலில் 07.10.1961 ல் பிறந்தவர் .<br>❖ பெற்றோர் ; பனார்சிதாஸ் சன்யோகிதா -<br>**கல்வி**<br>❖ அரசுப் பள்ளியில் தன்னுடைய ஆரம்பக் கல்வியைக் கற்றார்.<br>❖ விண்வெளித் துறையில் இளநிலை முதல் முனைவர் பட்டம் வரை படித்தார்<br>**விண்வெளிப் பயணம்**<br>❖ விமானம் ஓட்ட, பயிற்சி பெற்றார்.<br>❖ நாசாவில் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.<br>❖ 1997 ஆம் ஆண்டு தனது முதல் விண்வெளிப் பயனத்தை தொடங்கினார்<br>❖ 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனை படைத்தார்<br>**கொலம்பியா விண்கல நிகழ்வு**<br>❖ 2003, ஜனவரி - 16ல் கொலம்பியா விண்கலத்தில் சென்றார்.<br>❖ 16 நாட்கள் ஆய்வை முடித்து பூமிக்குத் திரும்பும் போது விண்கலம் வெடித்துச் சிதறியது<br>❖ பயணம் செய்த அனைவரும் இறந்தனர்.<br>**முடிவுரை**<br>தன் கனவை நனவாக்கிய சாதனைப் பெண் கல்பனா சாவ்லாவைப் போன்று நாமும் உழைத்து வாழ்வில் உயர்வோம் | 8 |

www.Padasalai.Net

(அல்லது)

இடம் : பள்ளிக்கூடம்

பங்கு பெறுவோர் : ஆசிரியர், பாரதி, யாழினி, பார்கவி

| | |
|---|---|
| மாணவர்கள் | வணக்கம் ஐயா ! |
| ஆசிரியர் | வணக்கம் மாணவர்களே ! அமருங்கள், கரும்பலகையில் என்ன எழுதியிருக்கிறேன்? |
| மாணவர்கள் | கொக்கைப் போல, கோழியைப் போல, உப்பைப் போல |
| பாரதி | ஐயா, கொக்கைப் போல என்றால் என்ன ? |
| ஆசிரியர் | கொக்கு தனக்கான இரை கிடைக்கும் வரை காத்திருந்து குறிவைத்துப் பிடிக்கும். அதுபோல சரியான வாய்ப்பு வரும்வரைக் காத்திருந்து வாய்ப்பு வந்ததும் செயலை விரைந்து செய்து இலக்கை அடைய வேண்டும். |
| யாழினி | கோழியைப் போல என்பதை விளக்குங்கள் ஐயா ! |
| ஆசிரியர் | கோழி உணவிற்காக, குப்பையைக் கிளறினாலும் தனக்குரிய உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும். அதுபோல் நீங்களும் வாழ்வில் உயரத் தேவையானவற்றை மட்டுமே எடுத்துக்கொண்டு தேவையில்லாதவற்றைப் புறந்தள்ள வேண்டும். |
| பார்கவி | உப்பைப் பற்றிக் கூறுங்கள் ஐயா ! |
| ஆசிரியர் | உணவில் கரைந்துள்ள உப்பைக் காணமுடியாது. ஆனால் அதன் சுவையை உணர முடியும். அதுபோல நாம் கூட்டமாக இருந்தாலும் நமது தனித்தன்மையை வெளிப்படுத்தி உயர வேண்டும். |
| மாணவர்கள் | மிக்க நன்றி ஐயா ! |

ஆக்கம்

| | |
|---|---|
| இராஜ.வேல்முருகன் | பெ. ஜெயராமன் |
| நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர் | அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம், |
| வேப்பந்தட்டை வட்டம், | பெரம்பலூர் வட்டம், |
| பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெரம்பலூர் மாவட்டம் - 621101. |